Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 04, 2025

செவ்வாய்க்கிழமை 04, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 171 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

### 336 சபைகளுக்கு

# ‘மே’ இல் குட்டி தேர்தல்



**மார்ச் 17 முதல் 20 வரை வேட்புமனு கோரல்**

**28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 272 பிரதேச சபைகள் அடங்கும்**

**ஐந்தே ஐந்து சபைகளுக்கு தேர்தல் நடக்காது**

**சுயேச்சை வேட்பாளருக்கு 5,000 ரூபாய், அரசியல் கட்சி வேட்பாளருக்கு 1,500 ரூபாய்**

**19 நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்தலாம்**

**தேர்தலுக்கு பின்னர் புதிய கட்சிகள் பதியப்படும்**

**மூன்று தினங்கள் மூடப்படும்**

நாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான காலக்கெடு இறுதி நாளான மார்ச் 20ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நிறைவடையும் என்றும் திங்கள்கிழமை (03) அறிவித்துள்ளது. இதேவேளை, கட்டுப்பணம் ஏற்கும் நடவடிக்கை, மார்ச் 19ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நிறைவடையும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## வருமானம் அதிகரிப்பு

நாட்டின் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு 2025 ஜனவரி மாதத்தில் 400.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டாலர் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடிந்ததாக இலங்கை மத்திய வங்கி தமது புதிய புள்ளி விபரத்தில் தெரிவித்துள்ளது.

இது 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 341.8 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெற்றதுடன் அது ஒப்பீட்டளவில் 17.2% அதிகரிப்பாகும்.

தொடர்ச்சி P2



## “நிதியை பயன்படுத்தும் வேலைத்திட்டம் தயார்”

ஜனாதிபதியினால் அண்மையில் பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட உரையில் காணப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளில் ஒதுக்கப்பட்ட நிதியை வினைத் திறனாகப் பயன்படுத்துவதற்கு தனது அமைச்சின் கீழ் உள்ள நிறுவங்களின் அதிகாரிகள், முன்னுரிமை ஆவணத்தை அடிப்படியாகக் கொண்டு வேலைத் திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல் தொடர்பில் ஏற்கெனவே கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு கௌரவ அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “தேசபந்து சரணடைய வேண்டும்”




பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பொலிஸாரிடம் சரணடைய வேண்டும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## யானைகளுக்காக ரயில் நேரங்களில் மாற்றம்



இரவு நேரங்களில் ஓடும் ரயில்களில் காட்டு யானைகள் மோதுவதை தடுக்க ரயில்வே துறை நீண்ட கால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

முதல் கட்டமாக, காட்டு யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் ரயில் வேகத்தை குறைக்க, அந்த பகுதிகளுக்கு குறைந்த வேக வரம்பை வழங்குவதன் மூலம் ரயில்வே துறை ரயில் அட்டவணையை திருத்தியுள்ளது.

காட்டு யானைகள் நடமாட்டம் உள்ள காலங்களில் ரயில் வேகத்தை குறைக்க, சம்பந்தப்பட்ட பகுதிகளில் காட்டு யானைகள் நடமாட்டம் உள்ள காலங்களுக்கு முன்னும் பின்னும் ரயில்களை இயக்க, ரயில்வே துறை ரயில் தொடக்க நேரங்களையும் திருத்தியுள்ளது.

அதன்படி, மட்டக்களப்பு பாதையில் பளுகஸ்வெவ முதல் ஹிங்குராக்கொட வரையிலும், வெலிகந்த முதல் புனானி வரையிலும், திருகோணமலை பாதையில் கல்ஓயா சந்தி முதல் கந்தளாய் வரையிலும் உள்ள பகுதிகளைப் பாதிக்கும் வகையில் ரயில் நேர அட்டவணைகள் திருத்தப்பட்டு, 2025 மார்ச் 07 முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “கோட்டாவின் வீழ்ச்சி எரிபொருளிலே ஆரம்பித்தது”



கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் வீழ்ச்சி எரிபொருள் நெருக்கடியில் இருந்தே ஆரம்பித்தது என்றும் அதற்கு அவரின் அமைச்சரவையில் இருந்த அமைச்சர் ஒருவரே காரணம் என்றும் புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (03) நடைபெற்ற 2025 வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2



## எரிபொருள் விநியோக குளறுபடி: சி.ஐ.டி விசாரணை

எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட இடையூறு மற்றும் குளறுபடி தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்ஜ குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகத்தின் போது வழங்கும் தள்ளுபடி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை காரணமாக, எரிபொருள் விநியோக செயல்முறையை சீர்குலைத்து, அரசாங்கத்திற்கு சிரமத்தை ஏற்படுத்த எரிபொருள்

தொடர்ச்சி P2

## “அரசாங்கம் தவறினால் நடவடிக்கை”




பாராளுமன்ற சிறப்புரிமைகளை தவறாகப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் பொய்யான அறிக்கைகளை வெளியிடுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறினால், இந்த பிரச்சினையை நிவர்த்தி செய்ய தனிநபர் உறுப்பினர் பிரேரணையை முன்வைப்பேன் என்று இலங்கை பொதுஜன பெரமுன (SLPP) பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்.

கொழும்பில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஊடகங்களுக்குப் பேசிய அவர், பாராளுமன்றத்தில் தவறான தகவல்களைப் பரப்புவதை எதிர்க்கும் அனைவரும் இந்த பிரேரணையை ஆதரிப்பார்கள்.

பாராளுமன்றத்தில் வரம்பற்ற அளவு பொய் பரப்பப்படுகிறது. அது வழங்கப்பட்ட சலுகையின் காரணமாகும்.

தொடர்ச்சி P2



## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அறிக்கை விரைவில்


**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித புதைகுழி அகழ்வு பணிகள் நிறைவுபெற்ற பின்னர் அது தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில், கடந்த மாதம் வியாழக்கிழமை(27) அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில்,

தொடர்ச்சி P2

## “மனித எச்சங்கள் மீட்பு விவகாரத்திற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும்”



யாழ்ப்பாணம் - அரியாலை சித்துப் பாத்தி மயானத்தில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக அரசாங்கம் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கும் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் தலையிட்டுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘மே’ இல் குட்டி தேர்தல்

இந்நிலையில், மே மாதம் முதல் வாரத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் கசிந்தன.

எமது சகோதர பத்திரிகையான டெய்லி மிரருக்கு பேட்டியளித்த தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, வாக்களிப்புக்கான திகதி குறித்து விவாதித்து, இந்த வாரத்திற்குள் இறுதி முடிவை எட்ட சிறப்புக் கூட்டம் கூட்டப்படும் என்று தெரிவித்துள்ளார்.

“அந்தந்த அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படும் அனைத்து திட்டங்களையும் பரிசீலித்த பிறகு முடிவு எடுக்கப்படும்,” என்று அவர் கூறியுள்ளார்.

“நாங்கள் அனைத்து பரிந்துரைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறோம். இருப்பினும், ஒரு சுயாதீன அமைப்பாக, உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திற்கு ஏற்ப தொடர்புடைய திகதி அறிவிக்கப்படும்” என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

2025 பட்ஜெட் விவாதம் முடியும் வரை வேட்புமனுக்களை கோருவதில் தாமதம் செய்ய எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. அதே நேரத்தில், அரசாங்கம் முந்தைய அறிவிப்பை வலியுறுத்தி வருகிறது.

தேசிய மக்கள் சக்தி (NPP) இந்த செயல்முறையை விரைவுபடுத்துவது குறித்து குறிப்பாக குரல் கொடுத்து வருகிறது.

2023ஆம் ஆண்டுக்கு முதலில் திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தல், வேட்புமனுக்கள் ஏற்கெனவே தொடங்கிய பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. பல அரசியல் கட்சிகள் இந்த தாமதத்தை நீதிமன்றத்தில் எதிர்த்தன. 2025 தேர்தலுக்கு அதே வேட்புமனு பட்டியலைப் பயன்படுத்துவது நியாயமற்றது என்று வாதிட்டன.

புதிய நியமன செயல்முறைக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஒப்புதல் தேவைப்படும் என்று நீதிமன்றம் பின்னர் தீர்ப்பளித்தது குறிப்பிடத்தக்கது.

2025 வரவு-செலவு திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் மார்ச் 21ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடாக, திங்கட்கிழமை (03) மாலை அனுப்பிவைக்கப்பட்டுள்ள காணொளியில், உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் விளக்கமளித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க,உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்களுக்கான விண்ணப்பங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் 25 மாவட்டங்களிலும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

336 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெறும். கல்முனை மாநகர சபை, தெஹியத்த கண்டிய பிரதேச சபை , மன்னார் பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை மற்றும் எல்பிட்டிய பிரதேச சபை ஆகியவற்றுக்கு தேர்தல் நடைபெறாது என்றார்

அவற்றை தவிர்த்து, 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகளுக்கு தேர்தல் நடைபெறும். மார்ச் 17ஆம் திகதி முதல் மார்ச் 20ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுப்பணம் முதல் நாளான 19ஆம் திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்துடன், அந்த நாட்களுக்குள் வரும் போயா, சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது.

இந்நிலையில், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களுக்கான கட்டுப்பணம் மீள செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுவரையிலும் 93 மில்லியன் ரூபாய் மீள கையளிக்கப்பட்டுள்ளது. இன்னும் பெற்றுக் கொள்ளாதவர்கள் இருந்தால், அதற்கான விண்ணப்பத்துடன், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்துக்கு செல்ல வேண்டும்.

இம்முறை தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் கட்டுப்பணமாக 5000 ரூபாயையும் அரசியல் கட்சியில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தலா 1500 ரூபாவையும் செலுத்த வேண்டும். அந்தந்த பிரதேச, நகர மற்றும் மாநகர சபைகளுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை வேறுபடும்.

இதேவேளை, புதிய அரசியல் கட்சிகளைப் பதியும் நடவடிக்கை பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மார்ச் 28ஆம் திகதி வரையிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் அரசியல் கட்சி பதிவும் வெவ்வேறான செயற்பாடுகளாகும். இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்த பின்னரே, புதிய அரசியல் கட்சிகளுக்கான பதிவு இடம்பெறும் என்றார்.



## வருமானம் அதிகரிப்பு

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டதற்கு அமைவாக 2025 பெப்ரவரி 1 இலிருந்து 27ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு 232,341 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதன்படி 2025 ஆம் ஆண்டில் பெப்ரவரி 27ஆம் திகதி வரை மொத்தமாக 485, 102 சுற்றுலா பகுதிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

## “நிதியை பயன்படுத்தும்...

சம்பந்தப்பட்ட நிதியாண்டில் இந்த ஒதுக்கீடுகளை அதிக வினைத்திறனுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அமைச்சரின் தலைமையில் கடந்த 27.02.2025 அன்று பாராளுமன்றத்தில் கூடிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

நகர அபிவிருத்தித் திட்டங்களை குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவு செய்வது, பொதுமக்களுக்கு நலனை ஏற்படுத்தும் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்துதல் என்பவற்றை உறுதிப்படுத்த முறையான கட்டமைப்பு இல்லாமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்கும் போது நகர அபிவிருத்தித் அதிகாரசபை, உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் ஏனைய அனைத்து அரச நிறுவங்களினதும் கருத்துக்களை, முன்மொழிவுகளை பெறவேண்டும் எனவும் அதற்கமைய தயாரிக்கப்படும் திட்டங்களை செயற்படுத்தும் போது அந்தப் பொறுப்புகளை கொண்டுள்ள அனைத்து நிறுவனங்களும் அனுமதி வழங்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைய செயற்பட வேண்டும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

கடந்த காலங்களில் அவ்வாறான ஒருங்கிணைப்பு இடம்பெறவில்லை என்பது புலப்படுவதாகவும், அது திட்டங்களை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்படவும் மற்றும் வினைத்திறனின்மைக்கு காரணம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அத்துடன், மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் ஊடாக நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை அதிகரிப்பதற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதன் அவசியத்தை அமைச்சர் இதன்போது வலியுறுத்தினார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட பல்வேறு முன்மொழிவுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றைக் கருத்திற்கொள்ளுமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் கௌரவ வீடமைப்பு பிரதி அமைச்சர் ரீ.பீ.சரத்,குழுவின் உறுப்பினர்களான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள நிறுவங்களின் தலைவர்களும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## மனித எச்சங்கள்...

சித்துப் பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரசாங்கம் நீதியான விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்து தொடர்பில் அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மயானத்தில் தகன மேடை அமைப்பதற்காகக் குழி தோண்டப்பட்ட போது மனித எச்சங்கள் வெளிவந்தன. குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண நீதிமன்றம் கவனம் செலுத்திய நிலையில் குறித்த இடத்தை நீதிபதி மற்றும் சட்ட வைத்திய அதிகாரி சென்ற பார்வையிட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது, மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் நாட்களில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நீதிபதி கலந்துரையாடி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராய உள்ளதாக அறிந்தேன்.

ஆகவே கடந்த காலங்களைப் போன்று நீதிமன்ற விவகாரத்தில் நாங்கள் தலையிடப் போவதில்லை அரசாங்கம் என்ற வகையில் நீதித்துறையின் செயல்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என்றார்.

## கொக்குத்தொடுவாய்...

குறித்த வழக்கில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க. வாசுதேவா மற்றும் காணாமல் போனோர் அலுவலக சட்டத்தரணிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சார்பான சட்டத்தரணிகள் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இந்நிலையில், குறித்த வழக்கு விசாரணைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா, முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டு அறிக்கைகள் என்னால் சமர்ப்பிக்கப்பட்டது.

முதலாவதாக கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் இருந்த உடைகள் தொடர்பான ஆய்வறிக்கையும், இரண்டாவதாக கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணியின் போது, அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆட்களை இனம் காணக்கூடிய பொருட்கள் சம்பந்தமான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிச்சயமாக இரண்டாவது அறிக்கையில் அகழ்வாய்வின் போது, கண்டுபிடிக்கப்பட்ட இலக்கத்தகடுகள் ஆடைகளில் பொறிக்கப்பட்ட இலக்கங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் அடங்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த லக்கத்தகடுகளுக்குரியவர்களின் உறவினர்கள் யாராவது முன்வந்தால் இறந்தவர்களை நாங்கள் இலகுவாக இனங்காண முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இறுதி அறிக்கையை எதிர்வரும் ஆறு வார காலங்களில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இறுதி அறிக்கையின் போது, சட்ட வைத்தியர்களின் பூரண அறிக்கை இறந்தவர்கள் ஏன் இறந்தார்கள் என்ன காரணத்தினால் இறந்தார்கள் அவர்களின் வயது உயரம் போன்ற விபரங்கள் அடங்கிய அறிக்கைகள் ஆறு வார காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்நிலையில், வழக்கானது இம்மாதம் 27ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

## எரிபொருள் விநியோக குளறுபடி...

விநியோக முகவர்கள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு குழு முயற்சிப்பதாகவும், இதனால் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் குற்றப் புலனாய்வுத் துறைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

அதன்படி, இந்த முறைப்பாடுகள் தொடர்பாக குற்றப் புலனாய்வு பிரிவு மேலும் விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

சாதாரண பொது வாழ்க்கையை சீர்குலைத்து, நிலையற்ற தன்மையை உருவாக்கி, பொதுமக்களுக்கு இன்னல் ஏற்படுத்துபவர்கள் மீது தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது

## யானைகளுக்காக...

மேலும், அந்த திகதியிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் இயங்கும் "மீனகாயா" இரவு நேர அஞ்சல் ரயிலுக்கு S-13 வகை பவர் ரயிலை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

07.03.2025 முதல் வரவிருக்கும் திகதிகளுக்கு முன்பதிவு செய்த பயணிகள், திட்டமிட்டபடி சம்பந்தப்பட்ட ரயில்களுக்கு சரியான நேரத்தில் வந்து சேருமாறு ரயில்வே திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது..

மேலே குறிப்பிட்டுள்ளபடி ரயில்களின் தொடக்க நேரங்கள் திருத்தப்பட்டதாலும், வேகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாலும் ரயில் நிலையங்களை அடைவதில் கூடுதல் நேரத்தை செலவிட வேண்டியிருப்பதற்கு ரயில்வே துறை தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது.

காட்டு யானைகளைப் பாதுகாப்பதை ரயில்வே துறை ஒரு தேசியப் பொறுப்பாக கருதி நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

07.03.2025 முதல் திருத்தப்பட்ட ரயில் புறப்படும் மற்றும் சேருமிடம் நேரங்கள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன.

6011 (கொழும்பு கோட்டை - மட்டக்களப்பு) ‘உதய தேவி’

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் நேரம் காலை 06.05 மணி

மட்டக்களப்புக்கு வருகை மாலை 14.49 மணி

6075 (கொழும்பு கோட்டை - மட்டக்களப்பு) ‘புலதிசி’

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் நேரம் மாலை 15.15 மணி

மட்டக்களப்புக்கு வருகை இரவு 12.03 மணி

6079 (கொழும்பு கோட்டை - மட்டக்களப்பு) ‘மீனகயா’

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் நேரம் இரவு 23.00 மணி

மட்டக்களப்புக்கு வருகை காலை 08.28 மணி

6012 (மட்டக்களப்பு - கொழும்பு கோட்டை) ‘உதய தேவி’

மட்டக்களப்பிலிருந்து புறப்படும் நேரம் காலை 06.10 மணி

கொழும்பு கோட்டைக்கு வருகை மாலை 14.53

6076 (மட்டக்களப்பு - கொழும்பு கோட்டை) ‘புலதிசி’

மட்டக்களப்பிலிருந்து புறப்படும் நேரம் அதிகாலை 01.30 மணி

கொழும்பு கோட்டைக்கு வருகை காலை 10:10 மணி

6080 (மட்டக்களப்பு - கொழும்பு கோட்டை) ‘மீனகாயா’

மட்டக்களப்பிலிருந்து புறப்படும் நேரம் மாலை 18.15 மணி

கொழும்பு கோட்டைக்கு வருகை அதிகாலை 03.30 மணி

7083 (கொழும்பு கோட்டை - திருகோணமலை)

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் நேரம் இரவு 21.30

திருகோணமலைக்கு வருகை காலை 06.08

7084 (திருகோணமலை - கொழும்பு கோட்டை)

திருகோணமலை யிலிருந்து புறப்படும் நேரம் மாலை 18.30

கொழும்பு கோட்டைக்கு வருகை அதிகாலை 03.19.

## “கோட்டாவின் வீழ்ச்சி...

மின்சக்தி அமைச்சர் சுற்ற விடாது திடீர் மின்சாரத் தடைக்கான காரணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். தொப்பி வியாபாரியின் கதையை போன்றே இங்கு குரங்கால் மின் தடை ஏற்பட்டதாக கூறப்பட்ட கதை உலகம் பூராகவும் சென்றது. அன்று மின்தடையின் போது நீங்கள் உங்கள் வீட்டிலேயே இருந்தீர்கள். நீங்கள் தேடிப்பார்க்காமலே குரங்கு கதையை கூறியுள்ளீர்கள். குரங்கால் இந்த சம்பவம் நடக்கவில்லை என்று மின்சார சபை அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை என்பதனால் மின்சார அளவு அதிகமாக இருந்த காரணத்தினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தமையினால் மின் அழுத்தம் அதிகமாக இருந்தது என்றார்.

## “அரசாங்கம்...

பொய்களைப் பரப்புவதற்காக அல்ல, மக்களின் கவலைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது. இது மாற வேண்டும். இது தவறாகப் பயன்படுத்தப்பட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், நிலைமையை சரிசெய்ய தனிநபர் உறுப்பினர் பிரேரணையை நான் கொண்டு வருவேன்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் எத்தனை பேர் பாராளுமன்றத்தில் பொய் சொல்வதை எதிர்க்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

நாம் உண்மையைப் பேசினால், நமக்கு அத்தகைய சலுகை தேவையில்லை. நான் அதைக் கோரவில்லை. நான் எடுக்காத நடவடிக்கைகள், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள் அல்லது படுகொலைகளில் ஈடுபடுவது, பாராளுமன்றத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ நான் ஒருபோதும் உரிமை கோர மாட்டேன். பொதுமக்களை தவறாக வழிநடத்துபவர்கள் இந்த முயற்சியை எதிர்ப்பார்கள்” என்று அவர் கூறியுள்ளார்.

## “தேசபந்து சரணடைய வேண்டும்”

மேலும், முன்னாள் பொலிஸ் மா அதிபர், பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார். அவருக்குப் பின்னால் பெருமளவான பொலிஸார் செல்வது உரிய நடவடிக்கை அல்ல.

ஆகவே, முன்னாள் பொலிஸ் மா அதிபர் விரைவில் பொலிஸாரிடம் சரணடைய வேண்டும்.

வெலிகம, பெலேன பகுதியில் உள்ள உணவகமொன்றுக்கு அருகில் 2023ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட எட்டு பேரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை குற்றப்புலனாய்வு திணைக்களம் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் கொழும்பில் உள்ள வீடு உட்பட நான்கு வீடுகள் அண்மையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் அவர் குறித்த வீடுகள் எவற்றிலும் இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், மாத்தறை நீதவான் நீதிமன்றம் அவர் வெளிநாடுகளுக்கு செல்வதை தடுக்கும் வகையிலான பயணத்தடையை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# “வனவிலங்குகளை நிர்வகிப்பதற்கு எந்த அமைப்பும் இல்லை”

நாட்டின் வனவிலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை தடுக்கவும், பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் விலங்குகளை நிர்வகிப்பதற்கான தேவையான பரிந்துரைகளை வழங்கவும் விவசாய அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, நியமிக்கப்பட்ட குழுவின் அனைத்து பரிந்துரைகளும் மார்ச் மாத இறுதிக்குள் விவசாய அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் குழு ஏற்கனவே வனவிலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை குறைப்பது மற்றும் விவசாய பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் விலங்குகளை நிர்வகிப்பது குறித்து அறிஞர்கள், சுற்றுச்சூழல் அமைப்புகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், விவசாயிகள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் குடிமக்களிடமிருந்து கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை பெற்று அவற்றை மதிப்பீடு செய்து வருகிறது.

விவசாய பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வனவிலங்குகளின் எண்ணிக்கை குறித்த துல்லியமான தரவு அமைப்பு தற்போது இல்லாததால், தேர்ந்தெடுக்கப்பட்ட சில வனவிலங்குகளின் கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை குழு கண்டறிந்துள்ளது. இந்தக் கணக்கெடுப்பு மார்ச் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் அடைவைக் கண்காணிக்க, இங்கிரிய கிராம அலுவலர் பிரிவை தேர்ந்தெடுத்து சமீபத்தில் ஒரு முன்னோட்ட ஆய்வொன்று நடத்தப்பட்டது.




சமீபத்தில், இந்த விவகாரம் தொடர்பான நிபுணர்களின் கருத்தை கேட்கும் கூட்டம் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. வனவிலங்குகளை நிர்வகிப்பதற்கான எந்த அமைப்பும் தற்போது இல்லை என்றும், வனவிலங்கு முகாமைத்துவம் குறித்த விவாதத்தை சமூகத்தில் உருவாக்க வேண்டும் என்றும் அமைச்சர் இங்கு தெரிவித்தார். சரியான முகாமைத்துவம் இல்லாமல் பல ஆண்டுகளாக வளர்ந்து வரும் இந்த பிரச்சினையை தீர்க்க தேவையான தலையீட்டை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என்றும், இந்த குழுவின் பரிந்துரைகளின்படி குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆடையின்றி ஓட்டியவர் கைது

கொழும்பிலிருந்து கண்டிக்கு நிர்வாணமாக மோட்டார் சைக்கிளில் சென்றதற்காக கடுகன்னாவ பொலிஸாரால் திங்கட்கிழமை (03) காலை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சட்ட அமலாக்கப் பிரிவினரின் பெரும் முயற்சிக்குப் பிறகு 23 வயதுடைய குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி-கொழும்பு வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை பல பொலிஸ் அதிகாரிகள் கவனித்து அவரைப் பிடிக்க முயன்றனர், ஆனால் யாராலும் அவரைப் பிடிக்க முடியவில்லை.

கேகாலை மற்றும் மாவனெல்லை பொலிஸாரும் அந்த நபரைப் பின்தொடர்ந்து சென்றனர், ஆனால் அது பலனளிக்கவில்லை. கடுகண்ணாவை மற்றும் பேராதனை பொலிஸாருக்கு தகவல் தெரிவித்த பின்னர், கடுகண்ணாவை அதிகாரிகள் வீதித் தடைகளைப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிளை நிறுத்த முடிந்தது.



கைது செய்யப்பட்ட நபர் அஹங்கம பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார். அதனையடுத்து குறித்த இளைஞனின் மனநல மதிப்பீட்டைப் பெற அதிகாரிகள் அனுமதி கோருவார்கள்.

கண்டி பிரிவுக்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ் கடுகண்ணாவை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## NorthernUniSAT மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சை

NorthernUniSAT மாணவர் செயற்கைக்கோள் உருவாக்கும் திட்டத்திற்கான பாடசாலை மாணவர்களின் தெரிவுப் பரீட்சையானது புதன்கிழமை (05) அன்று இலங்கை முழுவதும் 32 பரீட்சை நிலையங்களில் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் மாலை 3 மணிமுதல் 4 மணிவரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பிலான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள 021-7534807 என்ற தொலைப்பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

### சிறுமி மீது பாலியல் வன்புணர்வு

## பொலிஸ் உத்தியோகத்தர் கைது

ஹம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் 16 வயதுடைய சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியதாக கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை(02) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

16 வயதுடைய சிறுமி மேலதிக வகுப்புக்குச் செல்வதாக கூறிவிட்டு, தனது காதலனுடன் கிரிந்த பிரதேசத்திற்குச் சென்றுள்ளார். இதனை அறிந்த தாயார், சிறுமியை அழைத்து விசாரித்துள்ளார்.

கோபமடைந்த சிறுமி வீட்டில் இருந்த பொருட்களை உடைத்து தனது தாயாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் அறிந்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் உத்தியோகத்தர், வீட்டில் உள்ள அறை ஒன்றில் வைத்து சிறுமியிடம் விசாரணைகளை நடத்தியுள்ளார்.

இதன்போது இந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் சிறுமியின் தாயார், திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து, விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திஸ்ஸமஹாராம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள் கான்ஸ்டபிள் வீட்டில் இருந்து கைக்குண்டுகள் மீட்பு

அனுராதபுரம் - கலென்பிந்துனுவெவ பகுதியில் முன்னாள் கான்ஸ்டபிள் ஒருவரின் வீட்டு வளாகத்திலிருந்து 341 தோட்டாக்கள் மற்றும் 4 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி, குறித்த பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (02) மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இவ்வாறு தோட்டாக்கள் மற்றும் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. 281 ரி - 56 தோட்டாக்கள், 5 மெகசின்கள் மற்றும் 84 எஸ் துப்பாக்கிக்கான 06 தோட்டாக்கள் உட்பட பெருமளவான தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



## வணிக வழிவத்தில் பணியாற்றிய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

ஒழுங்குறுத்தும் நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், ஒரு வணிக வடிவத்தில் பணியாற்றியுள்ளமை தெளிவாகியுள்ளதாக கோப் குழு சுட்டிக்காட்டியது. இந்த நிறுவனத்தின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும்போது இந்த விடயங்கள் தெளிவாவதாக கோப் குழு சுட்டிக்காட்டியது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்கு பாராளுமன்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) அதன் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) நிஷாந்த சமரவீரவின் தலைமையில் கடந்த 27.02.2025 அன்று கூடிய போதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, வதிவிட பயிற்சி வழங்காமல் வீட்டுப் பணிப்பெண்கள் 28,186 பேர் முதல் முறையாக வெளிநாடு சென்றுள்ளதால் 631,177,650 ரூபாய் வருமானத்தை பணியகம் இழந்துள்ளமை புலப்பட்டுள்ளது. 22410 ரூபாய் கட்டணம் அறவிட்டு 28 நாட்கள் வதிவிடப் பயிற்சி வழங்கியிருக்க வேண்டி இருந்தாலும், இந்தப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது புலப்பட்டது. அந்தப் பயிற்சிக்குப் பதிலாக மூன்று மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டு ஒரு நாளைக்கு சுமார் 390 பேருக்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளமை இங்கு புலப்பட்டது. இந்த நேர்முகப்பரீட்சையும் வீடியோ ஒன்றைப் பார்ப்பதன் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை புலப்பட்டதுடன், இதனால் 2023 மே மாதம் முதல் 2024 ஜூன் வரை வயதில் குறைந்தவர்கள் 683 பேர் வீட்டுப் பணிகளுக்காக வெளிநாடு சென்றுள்ளதாக தெரியவந்தது.

அத்துடன், காலி மாவட்டத்தில் இடம்பெற்ற 170,000 ரூபாய் அடிப்படையில் சமநல பூங்கா வேலைத்திட்டத்திற்கு 170,000 ரூபாய்க்கு வாடகைக்கு எடுத்த வர்த்தகக் கூடம் யாழ்ப்பாண வேலைத்திட்டத்தில் 500,000 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளமை புலப்பட்டுள்ளது

அத்துடன், காலி மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிக்கு 170,000 ரூபாய்க்கு 30 வர்த்தகக் கூடங்கள் வாடகைக்கு எடுத்துள்ளதுடன், அதே நிறுவனத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிக்கு எடுத்த வர்த்தக கூடம் ஒன்றுக்கு 500,000 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளமை இங்கு புலப்பட்டது. இந்தத் தொகைக்கு 25 வர்த்தகக் கூடங்கள் எடுத்துள்ளமை கண்டறியப்பட்டதுடன், அமைச்சின் செயலாளரிடமிருந்த கிடைத்த பரிந்துரைக்கு அமைய இந்தக் கட்டணம் செலுத்தப்பட்டதாக வருகை தந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், ஜயகமு ஸ்ரீலங்கா திட்டத்துக்கான மொத்த செலவு 1.2 பில்லியன் என இங்கு தெரிவிக்கப்பட்டதுடன், இதற்காக நிதி சரியான முறையைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இந்த செலவு 500 மில்லியன் ரூபாவுக்கு அதிகம் என்பதால், அதற்காக அமைச்சரவையின் அனுமதி தேவை எனவும், அந்த அனுமதி கிடைத்துள்ளதாக அதிகாரிகள் கூறுவதானால் இது தொடர்பில் கணக்காய்வாளர் திணைக்களத்தினால் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், சுற்றுலா வீசாவில் வீட்டுப் பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு பதிவுசெய்யப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை இங்கு புலப்பட்டதுடன் இது நிறுவனத்தின் பொறுப்பை முற்றாகத் தட்டிக்கழிப்பதாகும் என கோப் குழு சுட்டிக்காட்டியது. 2023 மார்ச் 30 இல. 07/2023 கொண்ட தலைவரின் சுற்றுநிருபத்தின் ஊடாக ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மற்றும் ஓமான் நாட்டுக்கு சுற்றுலா ஒப்பந்தம் இன்றி இந்தப் வீட்டுப் பணிப்பெண்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர்களது பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பேற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் பற்றி அதிகாரிகளிடம் குழு வினவியது. இவ்வாறு சுற்றுலா வீசாவில் 4,942 பேர் வெளிநாடு சென்றுள்ளதுடன், அவற்றில் அதிகமானவர்களுக்கு தொழில் வழங்கப்பட்டுள்ளமை சம்பந்தமான ஆவணங்கள் தூதரகத்தின் கணினி தகவல் கட்டமைப்பில் சேர்க்கப்படவில்லை என்பதும் இங்கு புலப்பட்டது.

அத்துடன், வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட புலம்பெயர்ந்தோரை தற்காலிகமாகத் தடுத்து வைப்பதற்கான தடுப்பு மையங்களைப் பராமரிப்பது குறித்தும், இந்நிறுவனத்தில் நியமனங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பற்றிய விசாரணைகளுக்காக கோப் உப குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கோப் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான என்.கே.எம்.அஸ்லம், சமன்மலி குணசிங்க, கோசல நுவன் ஜயவீர, சுஜீவ திசாநாயக்க, (வைத்தியர்) எஸ். ஸ்ரீ பாவானந்தராஜா, ஜகத் மனுவர்ண, ருவன் மபலகம, சுனில் ராஜபக்ஷ, தர்மப்பிரிய விஜேசிங்க, அசித நிரோஷன எகொட விதான, திலின சமரகோன், சந்திம ஹெட்டியாராச்சி மற்றும் சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குற்றங்களை அடக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்

தேசியப் பாதுகாப்பு என்பது ஒரு நாட்டின் இரகசியங்களையும் அதன் குடிமக்களையும் விரோதக் குழுக்களின் தாக்குதல்கள் போன்ற அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பதாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் தேசியப் பாதுகாப்பு அணுகுமுறையின்படி, தேசியப் பாதுகாப்பு என்பது மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் பாதுகாப்பு, மற்றும் வெளி மற்றும் உள் அச்சுறுத்தல்களில் இருந்து அரசின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பதாகும்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டால், கனேமுல்ல சஞ்சீவவின் கொலை நாட்டின் தேசியப் பாதுகாப்பில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில் கொலையாளிகள், திட்டமிட்டவர்கள் மற்றும் பிற சந்தேக நபர்களும் அடங்குவர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் கொலைகள் அனைத்தும் தனிப்பட்ட தகராறுகள், போதைப்பொருள் அல்லது பிற காரணங்களால் ஏற்படுகின்றன, மேலும் இந்த சம்பவங்கள் நாட்டின் தேசியப் பாதுகாப்பை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதே கேள்வியாகும்.

திடீரென குற்றங்கள் அதிகரித்ததற்குப் பின்னால் ஏதேனும் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் நோக்கம் உள்ளதா? என்ற சந்தேகத்தைப் பாதுகாப்புப் படையினர் எழுப்பியுள்ளனர். இந்த விவகாரம் குறித்து ஏற்கனவே விசாரணை நடைபெற்று வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது

குற்றங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம். மற்றொன்று, தனி நபர்களிடையே தனிப்பட்ட மட்டத்தில் செய்யப்படும் குற்றங்கள்.

தனி நபர்களுக்கிடையேயான குற்றங்களைத் தடுக்க, ஒவ்வொரு நபருக்கும் பின்னால் ஒரு பொலிஸ் அதிகாரியை நிறுத்துவது சாத்தியமில்லை. ஒட்டுமொத்தமாக ஒரு நாகரிக, ஒழுக்கமான சமூகத்தை உருவாக்குவதன் மூலம் இந்தக் குற்றங்களை ஒழிக்க முடியும். சமூகத்தில் மதிப்புகளையும் நல்ல குணங்களையும் வளர்ப்பதன் மூலம். இந்தப் பணியை நிறைவேற்றவே பாடசாலைகளும் மதத் தலங்கள் உள்ளன.

இருப்பினும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் நிலைமை முற்றிலும் வேறுபட்டது. அவற்றின் இருப்பு ஒரு சமூகத்தின் வீழ்ச்சியின் அறிகுறி மட்டுமல்ல, சமூகத்தில் அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. விழிப்புடன் இருப்பது, விசாரணை செய்தல், சோதனை செய்தல், குற்றவாளிகளைக் கைது செய்தல் மற்றும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துதல் ஆகியவற்றின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை அடக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இலங்கையில் 51 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களையும் அவற்றுடன் தொடர்புடைய 1,600 பேரையும் காவல்துறை ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்கள் இருப்பதாக பொலிஸாரே அறிவித்திருப்பது சற்று அவமானகரமானது

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முப்படைகளின் தலைவர்களுடன் சமீபத்தில் ஒரு சிறப்புக் கலந்துரையாடலை நடத்தினார். இது ஒரு புத்திசாலித்தனமான முடிவு. ஆனால், சட்டத்திற்குள் தனி நபர்களை சிறையில் அடைப்பதன் மூலம் குற்றங்களை அடக்க முடியாது. அதற்காக, குற்றத்துடன் பின்னிப்பிணைந்த பிற காரணிகள் மற்றும் தனிநபர்களும் அதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். அரசாங்கத்தால் மட்டுமே அதைச் செய்ய முடியும் என்பதை வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




உள்ளூராட்சித் தேர்தல்

# முஸ்லிம் கட்சிகளின் வியூகம் என்ன?

**மொஹமட் பாதுஷா**

ஆட்சிக் காலம் நிறைவடைந்த அனைத்து உள்ளூராட்சி சபைகளும் ஜூன் மாதம் 2ஆம் திகதி மீள புதிய ஆட்சியதிகாரத்தின் கீழ் இயங்க வேண்டும் என பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. எனவே, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மே மாதம் இறுதியில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை சில வேளைகளில் அரசியல் கட்சிகளும் மக்களும் பெரியதாகப் பொருட்படுத்துவதில்லை என்று தோன்றுவதுண்டு. 'நாம் பார்க்காத உள்ளூராட்சி தேர்தலா' என்ற எண்ணத்தில் குறிப்பாக முஸ்லிம் அரசியல் அணிகள் செயற்படுவதையும் அவதானித்து இருக்கின்றோம்.

ஆனால், இந்த முறை நடைபெறவுள்ள தேர்தலானது வித்தியாசமான சவால்களைக் கொண்ட தேர்தலாக இருக்கும். ஆளும் கட்சி உட்பட பெரும்பான்மைக் கட்சிகளுக்கும், முஸ்லிம் மற்றும் தமிழ்க் கட்சிகளுக்கும் இதுவரை காலமும் இல்லாத ஒரு கள நிலைவரத்தை இந்த தேர்தல் கொண்டு வரும் என எதிர்பார்க்கலாம்.

எனவே, குறிப்பாக முஸ்லிம் கட்சிகளும், அணிகளும் இந்த தேர்தலை எவ்விதம் எதிர்கொள்ளப் போகின்றன? என்ன வியூகத்தை, சூத்திரத்தை வகுத்து, இந்த களத்தை வெற்றி கொள்ளப் போகின்றன?

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஆகியவை அடுத்தடுத்து இடம்பெற்று இவ்விரண்டிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி வாகை சூடியுள்ளது. வழக்கமாகத் தேசிய ரீதியாக பலமாக உள்ள அல்லது தெற்கில் கோலோச்சும் கட்சிகள் சிறுபான்மை மக்கள் வாழும் பிரதேசங்களில் நேரடியாக வேட்பாளர்களை இறக்கி, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறைவாகும்.

ஆளும் தரப்பிற்கு அல்லது எதிரணிக்கு ஆதரவளிக்கின்ற ஒரு குறிப்பிட்ட முஸ்லிம் கட்சி சில இடங்களில் வேட்பாளர்களை நிறுத்துவதால், நேரடியாகக் களமாட வேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கும். சுதந்திரக் கட்சிக்கும் பெரமுனவுக்கும் கூட இருந்ததில்லை எனலாம்.

ஆனால், இப்போது நிலைமைகள் மாறி விட்டிருக்கின்றன. என்.பி.பி. ஆட்சி பீடமேறியுள்ளது. மாற்றம் என்ற அலையில் பெருமளவுக்கு முஸ்லிம்கள் அள்ளுண்டு போனதால், தனித்துவ அடையாள அரசியல் கட்சிகள், அணிகளின் செல்வாக்கு குறைவடைந்து போயுள்ளது.

முஸ்லிம் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படாதது தொடக்கம் நாட்டில் இப்போது வரை நிலவும் குழப்பங்கள் மக்களின் வாக்களிக்கும் முடிவில் செல்வாக்குச் செலுத்தலாம். முஸ்லிம்கள் தங்களது தனித்துவ அரசியல் கட்சிகளின் இருப்பு அவசியம் எனக் கருதலாம். ஆனால், கடந்த காதையைப் போல, எந்த பிரதேசத்திலும் வெற்றி நிச்சயிக்கப்பட்டதாக இல்லை என்பதை மறந்து விடக்கூடாது.

ஆளும் தரப்பாக மாறிய பிறகு, என்.பி.பி. இந்த தேர்தலில் முதன்முதலாக உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது. ஏனைய பெரும்பான்மைக் கட்சிகளும் வேட்பாளர்களை நிறுத்தலாம்.

கடந்த சில மாதங்களுக்குள் இடம்பெற்ற சிறிய கூட்டுறவு சபை தேர்தல்களில் என்.பி.பி. சந்தித்த சறுக்கல்கள் சிக்கலை ஏற்பட்டிருந்தமையால், நிச்சயமாக எப்பாடுபட்டாவது இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை வெற்றிகொள்ள முயற்சிக்கும் என்பதை யாவரும் அறிவோம்.

பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் என்பன மாகாண சபைகளுக்கும் பாராளுமன்றத்திற்குமான அரசியல் வழித்தடங்கள் ஆகும். எனவே, வீழ்ச்சியடைந்துள்ள முஸ்லிம் அரசியலை அடிமட்டத்திலிருந்து மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், அதற்கு இந்த தேர்தல் நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும்.

என்.பி.பி. அரசாங்கம் தன் மீதான விமர்சனங்களைச் சரிசெய்வதற்கும், அடிமட்ட அரசியல் அதிகாரத்தை உறுதி செய்வதற்கும் உள்ளூராட்சித் தேர்தலில் தமது வேட்பாளர்களைக் களமிறக்கும். இந்தப் பின்னணியில், முஸ்லிம் அணிகள் என்ன செய்யப் போகின்றன?

இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். அதாவது, முஸ்லிம் பிரதேசங்களில் களமிறக்கப்படுபவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர் ஒரு முஸ்லிமாகவே இருப்பார். எனவே, அது ஒரு பிரச்சினையில்லை.

இங்கிருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், குறிப்பிட்ட சபையில் யார் ஆட்சியமைப்பது என்பதுவும், இந்தத் தேர்தல் ஊடாக முஸ்லிம்களின் தனித்துவ அரசியல் பிரதேச மட்டத்தில் மீளக் கட்டியெழுப்பப்படுமா? என்பதுவும் ஆகும் இலங்கைச் சூழலில் சிறியதும் பெரியதுமாகப் பல முஸ்லிம் கட்சிகள் உள்ளன. சில கட்சிகள் எப்போதாவது அறிக்கை விடுவதற்கும், பெயரளவில் இயங்குவதற்கும் மட்டுமே பழக்கப்பட்டுள்ளன.

இதற்கப்பால், முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளே பெரும்பாலும் கடந்த இருபது வருடங்களுக்குள் உள்ளூராட்சி சபை ஒன்றைத்தானும் கைப்பற்றிய அரசியல் வரலாற்றைக் கொண்டுள்ளன.

ஆகவே, இக் கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்கு எவ்விதமான மூலோபாய திட்டங்களை வகுத்திருக்கின்றன? அல்லது வழக்கமான அதிமேதாவிக் கதைகளைக் கூறிக் கொண்டு, கோட்டையை இழக்கப் போகின்றனவா? என்ற கேள்வி எழுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிதான் பிரதேசங்களில் அடிமட்டம் வரை ஊடுருவிய முதலாவது தனித்துவ அடையாள முஸ்லிம் கட்சி எனலாம். இந்தக் கட்சியைப் போல, வேறு எந்தக் கட்சியும் அடிமட்ட முஸ்லிம் மக்களது மனங்களை வென்றிருக்கவில்லை.

இதனை அடிப்படையாகக் கொண்டுதான் மாகாண சபையிலும், பாராளுமன்றத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதித்துவங்களைப் பெற்றது. உள்ளூராட்சி சபைகளை ஆட்சி செய்தது.

இந்த வெற்றிக்கு முழுமுதற் காரணம் அதன் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் என்பது மறுக்க முடியாதது. ஆனால், அவரின் மரணத்திற்குப் பின்னர் றவூப் ஹக்கீமின் தலைமைத்துவத்தில் மு.கா. கட்சி பிரதிநிதித்துவ அரசியலிலும் மக்கள் மத்தியிலும் வீழ்ச்சியைச் சந்தித்தது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலில் கடந்த பொதுத் தேர்தலில் ஏற்பட்ட சரிவால் அதிகம் பாதிக்கப்பட்ட கட்சி முஸ்லிம் காங்கிரஸ் எனலாம். இதற்கு ஹக்கீமும் அக்கட்சியின் முன்னாள் எம்.பிக்களும் முக்கிய காரணியாக இருந்தனர்.

இதனை மு.கா. தலைவர் மீள் வாசிப்புச் செய்யத் தொடங்கியுள்ளதான ஒரு தோற்றப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் முஸ்லிம்களின் விவகாரங்களைக் கையாள்வதில் முன்னரை விடச் சற்றுச் சிறப்பாக செயற்படுவதாகத் தெரிகின்றது.

அண்மையில் முஸ்லிம் காங்கிரஸிற்கு ஒவ்வொரு பிரதேசத்திலும் செயற்குழுக்கள், கட்டமைப்புக்கள் உள்ளன. ஆனால், கடந்த பல வருடங்களாக அது சரிவரச் செயற்படுத்தப்படவில்லை. அத்துடன், மு.கா. அரசியல்வாதிகள் ஒவ்வொரு ஊரிலும் பல குழுக்களை உருவாக்கினர். ஆளுக்காள் குழிபறித்தனர். கட்சி தோற்றது.

இந்த நிலையிலிருந்து மீண்டெழ இந்த உள்ளூராட்சி தேர்தல் ஒரு வாய்ப்பாக இருக்கும். மு.கா. தனித்துப் போட்டியிடுவதற்கே சாத்தியமுள்ளது. அது நல்லதே என்றாலும், வழக்கமான புளித்துப் போன பிரசாரங்களைச் செய்யாமல் வேறு வியூகம் ஒன்றை மு.கா. பின்பற்ற வேண்டியுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வெற்றி என்பது கிட்டத்தட்ட அக்கட்சியின் தலைவர் றிசாட் பதியுதீனையே பெரும்பாலும் சார்ந்துள்ளது. வடக்கில் உருவான ஒரு கட்சியைக் கிழக்கு உள்ளிட்ட இடங்களுக்கும் விஸ்தரித்து, எம்.பிக்களை, சபைகளை பெற்றிருக்கின்றார் றிசாட்.

ஆனால், மக்கள் காங்கிரஸிற்கு பிரதேச மட்ட ஒழுங்கமைப்புக்கள் பெயருக்கு இருந்தாலும் கூட, அவை செயற்பாட்டில் இல்லை. உளப்பூர்வமாக செயற்படுகின்றவர்களை விடப் பணத்திற்காக, பதவிக்காகத் தலைமையைத் தேடி வந்தோர் அதிகம் என்றும் கூறலாம்.

இதனைத் தலைவர் இப்போது அறிந்து கொண்டுள்ளார். கட்சியைச் சரியாக, நம்பிக்கையான ஆட்களைக் கொண்டு முன்கொண்டு செல்ல வேண்டுமென நினைப்பதாகத் தோன்றுகின்றது.

எவ்வாறிருப்பினும், கடந்த இரண்டொரு வருடங்களாக மக்கள் காங்கிரஸின் அரசியல் இயக்கம் சற்று மந்தகதி அடைந்துள்ளது. முஷாரப் எம்.பியை கட்சி இழந்ததால் இந்த நிலைமை ஏற்படவில்லை. மாறாக, தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் விறுவிறுப்பற்ற போக்குகளால் இந்நிலை உருவாகியுள்ளது.

ஆகவே, நிச்சயமாக மக்கள் காங்கிரஸ் புதிய வியூகம் ஒன்றை வகுத்து இத்தேர்தலில் போட்டியிட வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் வடக்கு, கிழக்கில் தம் வசம் இருந்த ஒரு சில உள்ளூராட்சி சபைகளையாவது வெற்றி கொள்வது பெரும் சிரமமாக இருக்கும்.

இதேவேளை, தேசிய காங்கிரஸ் கட்சி என்பது முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவை மையப்படுத்தியது. இதனது வெற்றியும் தோல்வியிலும் அவரது பங்கு முக்கியமானது.

அவர், வெறுமனே கதைத்துக் கொண்டிருக்காமல் நிறையச் சேவைகளைச் செய்தார். ஆனால், கட்சி வளர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு இன்று வரை உள்ளது. அத்துடன், தான் செய்த சேவைகளைக் கொண்டு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் தனது எம்.பி. பதவியைக் கூட உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலை தே.கா. தலைவருக்கு ஏற்பட்டது.

எனவே, தேசிய காங்கிரஸ் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனது பழைய வியூகங்களைத் தூக்கி எறிந்து விட்டு புது வழியில் பயணிக்க வேண்டும். 'மக்கள் நன்றிக் கடனுக்காக வாக்களிப்பார்கள்' என்று நம்பிக் கொண்டிருக்காமல், யதார்த்த நிலையைப் புரிந்து செயற்பட வேண்டும்.

தே.கா.வின் அரசியல் இருப்புக்கு இந்தத் தேர்தல் வாழ்வா சாவா போராட்டமாகும். எனவே, தமக்கிருந்த இரண்டு மூன்று உள்ளூராட்சி சபைகளையாவது வெற்றி கொள்ளவில்லை என்றால், அந்தக் கட்சியின் எதிர்காலம் சூனியத்திற்குள் தள்ளப்படும்.

எது எப்படியிருப்பினும், முஸ்லிம் கட்சிகள், அணிகள் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ அரசியலை நிறுத்துவதற்கான தேர்தல்கால வியூகங்களை இப்போதே தயாரித்துக் கொள்ள வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

சோதனைகள் இன்றி வாழ்க்கையை நுகர முடியாது. சோதனை இன்றேல், வாழ்க்கையில் வெற்றிபெறவும் முடியாது. சோதனைகளைக் கடந்து வெற்றி பெறும்போது, அதைவிடவும் சுவாரஸ்யம் ஏது?

உழைத்துப் பெறும் பொருட்களுக்குப் பெறுமதி அதிகம். இலவசமாகப் பெற்றவைகளை காலப்போக்கில் மதிப்பதும் இல்லை. காசின் பெருமை வியர்வை சிந்தி உழைப்பவனுக்கே தெரியும். துன்பம் சூழும்போது அச்சத்தை விலக்குக. அவற்றை உடைக்கும் வழிகளை அறிந்திடுக. அதற்குள்ளே புகுந்து கொள்ளக் கூடாது.

வாழ்வின் நுணுக்கம் தோல்வியில் புரிகின்றது. அடிவாங்கும் அனுபவங்கள் துன்பங்களைப் பஸ்பமாக்கி விடுகின்றன.

சிலசமயம் துன்பமூட்டும், அதிலிருந்து விலகினால் சந்தோசம். இது, மீண்டும் மீண்டும் சுழற்சி. காலப்போக்கில் எல்லாமே பழகிவிடும். இவற்றில் இருந்து மனிதன் வலிமை பெறுகின்றமை கண்டு.

கஷ்டம் என்றால் தங்களுக்கு மட்டும்தான் என எண்ணுவது மனித பலவீனம். இன்ப துன்பங்களில் இருந்து விலகுவதே ஞானம்.

நன்றி – பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### சுத்தமற்ற மலசலக்கூடத்தால் அசௌகரியம்



முல்லைத்தீவு - முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள மலசலக்கூடம் சுத்தம் செய்யாது துர்நாற்றம் வீசுவதால் ஆலயத்திற்கு வரும் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பாரிய அசௌகரியத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் அமைந்துள்ள முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தை கடந்தே, வடபகுதியை அடைய முடியும்.

எனவே, இந்த வீதியினூடாகப் பயணிக்கும் பயணிகள், இவ்வாலயத்தில் தரித்த பின்னரே, தமது பயணத்தைத் தொடருவர். இவ்வாறு இயங்கி வரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்குத் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். அங்கு வருபவர்கள் மலசலக்கூடத்தைப் பயன்படுத்துவதற்காக ஒருவருக்கு 20 ரூபாய் அறவிடவேண்டும். இப்படி பணத்தைப் பெற்றுக்கொண்டு மலசலக்கூடத்தைச் சுத்தம் செய்யாது துர்நாற்றம் வீசுவதால் அங்கு வரும் மக்கள் பாரிய அசௌகரியத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருவதாக கூறப்படுகின்றது.

எனவே, மலசலக்கூடத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அதனை நாள்தோறும் சுத்தம் செய்து மக்கள் பாவனைக்கு பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

– எஸ்.ரேணுகா



# “அரசாங்கத்துக்குள்ளே பாரிய முரண்பாடு”

வலுசக்தி துறையின் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்துக்குள்ளே பாரிய முரண்பாடுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி எம். பி.அஜித் பெரேரா தெரிவித்தார்.



மின்சார சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு மின்சார அமைச்சினால் முன்வைக்கப்பட்டிருக்கும் எண்ணக்கருக்கருக்கள் பத்திரத்திற்கும் நிதி அமைச்சராக ஜனாதிபதி முன்வைத்திருக்கும் எண்ணக்கருக்கள் பத்திரத்துக்கும் பாரிய முரண்பாடுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (03) இடம்பெற்ற பட்ஜெட் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்

மேலும், நாட்டின் உற்பத்தி பொருளாதாரத்துக்குப் பிரதான தடையாகவுள்ள மின்சார கட்டண அதிகரிப்பு , மின்சாரத்தின் நம்பகத்தன்மை ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பான பிரச்சினைக்கு அரசாங்கம் விரைவாகத் தீர்வு காணாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் சவாலை எங்களால் வெற்றிகொள்ள முடியாது.

2024ஆம் ஆண்டில் இந்த பாராளுமன்றம் புதிய மின்சார சட்டம் ஒன்றை அனுமதித்துக்கொண்டது. குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டபோது, நாங்கள் அது தொடர்பில் தெளிவுபடுத்திக்கொள்ள நீதிமன்றத்தை நாடினோம் என்றார்.

# காற்றாலையை மன்னார் மக்கள் எதிர்ப்பது ஏன்?



மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் காற்றாலை திட்டம் தொடர்பில் நிலவும் சந்தேகங்கள் காரணமாகவே மக்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிடுகின்றனர் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பி.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(03) நடைபெற்ற 2025 பட்ஜெட்டின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி தனது வரவு- செலவுத் திட்ட உரையில் மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கும் உட்கட்டமைப்பு நவீன மயப்படுத்தலுக்கும் இந்த வரவு செலவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவேற்பதாகவும் கூறியிருந்தார். புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் வடக்கு, கிழக்கில் காற்றாலை திட்டம் மிகவும் பாதுகாப்பான மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியை உற்பத்தி செய்யக் கூடிய முறையாக உள்ளது. காற்றாலையில் மிகவும் குறைந்த உற்பத்தி செலவு மற்றும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு குறைவாகும்.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் காற்றாலை திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகின்றது. இதில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களால் மக்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்றார்.

# “நீர்மின் வளத்தை மேம்படுத்த நடவடிக்கை”



எரிபொருள் மற்றும் நிலக்கரி ஊடாக மின்னுற்பத்தியை இயலுமான அளவு குறைத்து நீர்மின் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் செயலாற்றுகையை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வலு சக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(03) இடம்பெற்ற 2025இற்கான வரவு-செலவுத் திட்டத்தின் வலுசக்தி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், முறையாக விநியோகிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் ஊடாக மின்னுற்பத்தியை வரையறுத்துக் கொண்டு நீர் மின்னுற்பத்தி ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்வதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மொரகொல்ல நீர்மின் உற்பத்தி திட்டத்தை 2026 இல் முழுமைப்படுத்திக் கொள்வதற்கு முடியுமாகவிருக்கும் என்றார்.

# “சர்வதேச எண்ணெய் களஞ்சியமாக மாற்றும்”



திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை சர்வதேச எண்ணெய் களஞ்சியமாக மாற்றியமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(03) இடம்பெற்ற 2025 பட்ஜெட் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், 2025-2026 வரையான காலப்பகுதியில் எரிபொருள் பாவனைக்கான கேள்வி குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2050களில் பெரும்பாலான நாடுகள் எரிபொருள் பாவனையில் இருந்து விடுபட்டு இயற்கைக்குப் பாதிப்பில்லாத வழிமுறைகளுக்குச் செல்லும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சில நாடுகள் கனிய எண்ணெய் ஆய்வுகளை மேற்கொள்ளப் போவதில்லை என்ற தீர்மானத்தைக் கொள்கை ரீதியில் எடுத்துள்ளன. ஆகவே, உலக நாடுகள் மாற்றுச் சக்தி வலுத்துறை தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளன என்றார்.



# இளம் நடிகருடன் ஜோடி சேரும் கீர்த்தி

இளம் நடிகர் ஒருவருக்கு ஜோடியாக நடிகை கீர்த்தி சுரேஷ் நடிக்க ஒப்புக் கொண்டு இருப்பதாகவும், இந்த படம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று தகவல் வந்துள்ளது.

இளம் நடிகரான அசோக் செல்வன் ஜோடியாக, கீர்த்தி சுரேஷ் நடிக்க இருப்பதாகவும், இந்த படத்தை மில்லியன் டாலர் ஸ்டுடியோ நிறுவனம் தயாரிக்க இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிறுவனம் ஏற்கெனவே ’குட் நைட்’ மற்றும் ’லவ்வர்’ ஆகிய இரண்டு சூப்பர் ஹிட் படங்களை தயாரித்துள்ளது. இந்த நிறுவனத்தின் அடுத்த தயாரிப்பில் தான் அசோக் செல்வன் கீர்த்தி சுரேஷ் இணைந்து நடிக்க உள்ளனர்.

இந்த படம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும், படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என்றும் கூறப்படுகிறது.



# சிம்பு படத்தில் சந்தானம்

சிம்பு நடிக்கும் 49ஆவது படத்தின் படப்பிடிப்பு தொடங்கி விட்டதாகவும், இந்த படத்தில் சந்தானம் இணைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சிம்புவின் பிறந்த நாளன்று, அவரது 49ஆவது, 50ஆவது மற்றும் 51ஆவது படங்கள் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியானது. சிம்புவின் 49ஆவது படத்தை ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்குவதாக அறிவிக்கப்பட்டது.

இவர் ஏற்கனவே ’பார்க்கிங்’ என்ற வெற்றிப் படத்தை இயக்கிய நிலையில், இவரது இரண்டாவது படமே சிம்புவின் படமாக அமைந்தது.

இந்த படத்தை டான் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. இந்தநிலையில், தற்போது படப்பிடிப்பு தொடங்கி விட்டதாகவும், இதில் சந்தானம் இணைந்து உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சந்தானம் கடந்த சில ஆண்டுகளாக ஹீரோவாக மட்டுமே நடித்து வருகிறார். இதனால், சிம்புவின் படத்தில் அவர் எந்த கதாபாத்திரத்தில் நடிக்கிறார் என்று தெரியவில்லை. இந்த தகவல் ரசிகர்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது.

# மோகன்லால் படத்தில் நடிக்க மறுப்பு



மலையாள சூப்பர் ஸ்டார் மோகன்லால் படத்தில் வில்லனாக நடிக்க தனக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை மறுத்து விட்டதாக ஜீவா தெரிவித்துள்ளார்.

நடிகர் ஜீவா 2003 ஆம் ஆண்டு “ஆசை ஆசையாய்” என்ற திரைப்படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமானார். அதன் பிறகு, பல படங்களில் ஹீரோவாக நடித்துள்ளார்.

அண்மையில், அவர் நடித்த “அகத்தியா” என்ற திரைப்படம் வெளியானதுடன், படத்தின் ப்ரோமோஷனுக்காக பேட்டி அளித்த ஜீவா, மோகன்லால் படத்தில் வில்லனாக நடிக்க வாய்ப்பு வந்ததாகவும், அதை மறுத்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

மோகன்லால் நடித்த “மலைக்கோட்டை வாலிபன்” என்ற திரைப்படத்தில் வில்லனாக நடிக்க இயக்குநர் கேட்டதாகவும், ஆனால் பாதி மொட்டை அடிக்க வேண்டும் என்று சொல்லியதால் அந்த படத்தில் நடிக்க மறுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, மோகன்லால் உடன் ஜீவா “அரண்” என்ற படத்தில் நடித்திருந்தார். அந்த படத்தில் இருவருக்கும் சமமான கேரக்டர் வழங்கப்பட்டிருந்தது.

# அது நான் இல்லை



நடிகர் அஜித் நடித்த ’நேர்கொண்ட பார்வை’ என்ற திரைப்படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்த பிரபல பொலிவூட் நடிகை வித்யா பாலன், போலி வீடியோ தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளார்.

வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூகத் தளங்களில் வைரல் ஆகி வரும் வீடியோவில் இருப்பது தான் இல்லை என்றும் அது ஒரு ஏஐ டெக்னாலஜியால் உருவாக்கப்பட்ட வீடியோ என்றும் இதை உண்மை என நம்பி விட வேண்டாம் என்றும் நடிகை வித்யா பாலன் தன்னுடைய இன்ஸ்டாவில் வெளியிட்டுள்ள அறிவிப்பில் இரசிகர்களுக்குத் தெரிவித்துள்ளார் .

மேலும் எந்த ஒரு வீடியோவையும் பகிர்வதற்கு முன்பாக நன்றாகத் தேடிப் பார்த்து விட்டுச் செய்துவிட்டு ஏஐ தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட பொய்யான வீடியோ என்று தெரிந்தால் அதனைப் பகிர வேண்டாம் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

ஏற்கெனவே ராஷ்மிகா மந்தனா, ஆலியா பட், தீபிகா படுகோன், ரன்வீர் சிங் உள்ளிட்ட சினிமா பிரபலங்களின் டீப்பேக் வீடியோ வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த வகையில் தற்போது வித்யா பாலன் வீடியோவும் வெளியாகி வைரல் ஆகி வருவதை அடுத்து இந்த விளக்கத்தைத் தனது இன்ஸ்டாவில் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான்

மூடப்பட்ட தொலைக்காட்சி நிலையம்


# மீண்டும் திறப்பதற்கு அனுமதி

ஆப்கானிஸ்தான், காபூலில் மூடப்பட்ட தொலைக்காட்சி நிலையம் மீண்டும் செயற்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில், 2021ஆம் ஆண்டு, தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். அதன்பிறகு அங்கு பெண்கள் உயர்கல்வி பயிலத் தடை உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

தலிபான்களின் இந்த நடவடிக்கைக்கு ஐ.நா.சபை கடும் கண்டனம் தெரிவித்தது. மேலும் பல நாடுகள் ஆப்கானிஸ்தானுடனான தூதரக உறவை முறித்துக் கொண்டன.

இதற்கிடையே சமீப காலமாக சர்வதேச உறவை மேம்படுத்த தலிபான்கள் முடிவுசெய்துள்ளனர். எனவே நாட்டில் விதிக்கப்பட்டு இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருகின்றன..



இந்நிலையில், தற்போது, கடந்த ஆண்டு, தலைநகர் காபூலில் மூடப்பட்ட தொலைக்காட்சி நிலையத்தை மீண்டும் செயற்பட அனுமதி வழங்கி உள்ளனர்.

ஏற்கெனவே, பெண்கள் வானொலி நிலையமான ரேடியோ பேகம் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சீனா

தங்கப் பாத்திரத்தில்

## சமையல் செய்த பெண்



சீனப் பெண் ஒருவர், தங்கப் பாத்திரத்தில் சமைத்துச் சாப்பிடும் வீடியோ வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

குறித்த இளம்பெண் 2 தங்க நகைக் கடைகளை நடத்தி வருகிறார். அவர் தனது நண்பரின் பட்டறையில் 1 கிலோ தங்கத்தில், தங்கப் பாத்திரத்தைச் செய்யச் சொல்லி வாங்கினார். அதில் தனக்குப் பிடித்தமான உணவைச் சமைத்துச் சாப்பிட்டு வீடியோ வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில் "இந்த தங்கப்பாத்திரம் விற்பனைக்குத்தான் தயாரிக்கப்பட்டு உள்ளது. அதனால் வாடிக்கையாளர்களிடம் அனுமதி கேட்டுத்தான் அதில் சமைத்துச் சாப்பிட்டுக் காட்சிப்படுத்தி உள்ளேன். தங்கம் அதன் சிறந்த கடத்துத் திறனால், உணவைச் சீக்கிரம் சமைக்க உதவுகிறது. ஆனால் உணவின் சுவையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை" என்று கூறியுள்ளார்.

விற்பனைக்கு வந்துள்ள அந்த தங்கப்பாத்திரத்தின் விலை இலங்கை மதிப்பில் ரூ.252 இலட்சம். அந்த வீடியோவை பல இலட்சம் பேர் இரசித்து உள்ளனர். பலரும் கலவையான கருத்துகளைப் பதிவிட்டுள்ளனர்.

இஸ்ரேல்

காசாவுக்கான உதவிகளை

## நிறுத்தியது இஸ்ரேல்

ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தம் சனிக்கிழமையுடன் (1) முடிவடைந்த நிலையில், காசாவுக்குள் உணவு, மருந்து உள்ளிட்ட இதர பொருட்கள் நுழைவதை, ஞாயிற்றுக்கிழமையுடன் (2) நிறுத்திவிட்டதாக, இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் - காசாவுக்கு இடையே நடந்து வந்த போர், அமெரிக்க உள்ளிட்ட நாடுகளின் வற்புறுத்தலால், நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, இருநாடுகளும் ஜனவரி 19ஆம் திகதி போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டன.

ஒப்பந்தப்படி இஸ்ரேல்-காசா இடையே பணய கைதிகள் பரிமாற்றம் நடந்தது. இந்த ஒப்பந்தப்படி பல கட்டங்களாக ஏராளமான பணய கைதிகள் விடுவிக்கப்பட்டு உள்ளனர். ஆனால், இன்னும் பல பணய கைதிகளை விடுவிக்க வேண்டி உள்ளது. இந்த சூழலில் இரு தரப்பினரும் இன்னும் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடத்தவில்லை. ஆனால் "அடுத்தகட்ட பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் தயாராக இருக்கிறது, காசா போர் நிறுத்தத்தை நீட்டிக்க விரும்பவில்லை" என்று இஸ்ரேல் கூறி வருகிறது.

ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தம் சனிக்கிழமையுடன்(1) முடிவடைந்த நிலையில், காசாவுக்குள் உணவு, மருந்து உள்ளிட்ட இதர பொருட்கள் நுழைவதை இஸ்ரேல் ஞாயிற்றுக்கிழமையுடன் (2) நிறுத்தி விட்டதாக அறிவித்தது.

போர் நிறுத்தத்தை நீட்டிக்க அழுத்தம் தரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மேலும், "அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகத்துடன் பேசிய பின்பு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும்" தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக, ஹமாஸ் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.



தமிழகம்

# சிவாஜி கணேசனின் வீடு பறிபோனது

மறைந்த நடிகர் சிவாஜி கணேசன் வீட்டைக் கைப்பற்றுமாறு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரனும், நடிகருமான துஷ்யந்த், அவரது மனைவி அபிராமி ஆகியோர் பங்குதாரர்களாக உள்ள ஈசன் புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் விஷ்ணு விஷால், நிவேதா பெத்துராஜ் ஆகியோரின் நடிப்பில் ஜகஜால கில்லாடி என்கிற படத்தைத் தயாரிப்பதற்குக் கடன் வழங்கக் கோரி தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் என்கிற நிறுவனத்தை அணுகினர்.

படத் தயாரிப்புக்காக தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம், 3 கோடியே 74 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தனர். இந்த கடனை ஆண்டுக்கு 30 சதவீத வட்டியுடன் திருப்பிக் கொடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடன் தொகையைத் திருப்பி தராததை அடுத்து இந்த விவகாரத்தில் தீர்வு காணும் வகையில் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி டி.ரவீந்திரன் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார்.

இந்த விவகாரத்தை விசாரித்த மத்தியஸ்தர் நீதிபதி ரவீந்திரன், கடன் தொகை வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயை வசூலிக்க ஏதுவாக, ஜகஜால கில்லாடி படத்தின் அனைத்து உரிமைகளையும், தனபாக்கியம் எண்டர் பிரைசஸ் நிறுவன நிர்வாக இயக்குநரிடம் ஒப்படைக்கும்படி கடந்த 2024ஆம் ஆண்டு மே 4ஆம் திகதி உத்தரவிட்டார்.

உரிமைகளைப் பெற்று அவற்றை விற்று கடன் தொகையை ஈடு செய்யவும், மீதத்தொகையை ஈசன் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்திடம் வழங்கவும் உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவின்படி படத்தின் அனைத்து உரிமைகளையும் வழங்கக் கோரிய போது, படம் முழுமையடையவில்லை எனக் கூறி பட தயாரிப்பு நிறுவனம் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால், மத்தியஸ்தர் தீர்ப்பை அமுல்படுத்தும் வகையில், ராம்குமாரின் தந்தையான சிவாஜி கணேசனின் வீட்டைக் கைப்பற்றிச் செய்து, பொது ஏலம் விட உத்தரவிடக் கோரி, தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனம் ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

அந்த மனுவில், தற்போது வரை கடன் தொகை வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 39 இலட்சத்து 5 ஆயிரத்து 543 ரூபாய் வசூலிக்க வேண்டியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது



இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அப்துல் குத்தூஸ், பதில்மனு தாக்கல் செய்ய ஈசன் புரொடக்ஷன்ஸ் தரப்பில் அவகாசம் கேட்ட போதும், இதுவரை பதில் மனுத் தாக்கல் செய்யவில்லை எனக் கூறி, நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டைக் கைப்பற்றுமாறு செய்ய உத்தரவிட்டார். மேலும், இந்த உத்தரவு குறித்து சம்பந்தப்பட்ட சார் பதிவாளருக்குத் தகவல் தெரிவிக்கவும் உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை, புதன்கிழமை (5) வரை ஒத்திவைத்தார்.



சம்பியன்ஸ் கிண்ணம்

# நியூசிலாந்தை வீழ்த்திய இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்ற நியூசிலாந்துடனான குழு ஏ போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

இந்தியா: 249/9 (50 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷ்ரேயாஸ் ஐயர் 79 (98), ஹர்திக் பாண்டியா 45 (45), அக்ஸர் பட்டேல் 42 (61) ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 5/42, கைல் ஜேமிஸன் 1/31, றஷின் றவீந்திர 1/31, மிற்செல் சான்ட்னெர், வில் ஓ ரூர்க் 1/47)

நியூசிலாந்து: 205/10 (45.3 ஓவ.) (துடுப்பாட்டம்: கேன் வில்லியம்சன் 81 (120), மிற்செல் சான்ட்னெர் 28 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: வருண் சக்கரவர்த்தி 5/42, குல்தீப் யாதவ் 2/56, ஹர்திக் பாண்டியா 1/22, அக்ஸர் பட்டேல் 1/32, இரவீந்திர ஜடேஜா 1/36)

போட்டியின் நாயகன்: வருண் சக்கரவர்த்தி

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை இந்தியா எதிர்கொள்கிறது.

நாவற்காடு றோ.க.த.வி. இல்ல விளையாட்டுப் போட்டி

## வென்ற சென். பீற்றர் இல்லம்



எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் கற்பிட்டி நாவற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியானது சென். பீற்றர் இல்லம் வென்றது.

புனித சிந்தாத்திரை மாதா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் சென். ஜோன் இல்லத்தை வென்றே சென். பீற்றர் இல்லம் வெற்றிவாகை சூடியது.

சம்பியன்ஸ் கிண்ண அவுஸ்திரேலியக் குழாமில்


## ஷோர்ட்டை பிரதியிட்ட கொனோல்லி



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமுக்கு கூப்பர் கொனோலி அழைக்கப்பட்டுள்ளார்.

காயம் காரணமாக மற் ஷோர்ட் வெளியேறிய நிலையிலேயே கொனோலி குழாமுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஷோர்ட்டுக்குப் பதிலாக சுழற்பந்துவீச்சை மேற்கொள்ளக்கூடிய கொனோலி அணியில் நேரடியாக இடம்பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.



இத்தாலிய சீரி ஏ தொடர்

## மிலனை வென்ற லேஸியோ

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஏ.சி மிலனின் மைதானத்தில் திங்கட்கிழமை (03) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் லேஸியோ வென்றது.

லேஸியோ சார்பாக மட்டியா ஸக்கக்னி, பெட்ரோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை சாமுவேல் சுக்வுஸே பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 58 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் காணப்படுகின்றது. 57 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நாப்போலியும், 55 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 50 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லேஸியோ காணப்படுகின்றது.

இங்கிலாந்து கால்பந்தாட்ட சங்க சவால் கிண்ணம்

## வெளியேற்றப்பட்டது யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்ட சங்க சவால் கிண்ணத் தொடரிலிருந்து நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் யுனைட்டெட் வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்ற புல்ஹாமுடனான விலகல் முறையிலான இத்தொடரின் நான்காவது சுற்றுப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து யுனைட்டெட் வெளியேற்றப்பட்டுள்ளது.

போட்டியின் மேலதிக நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்று சமநிலையில் காணப்பட்ட நிலையில், பெனால்டியிலேயே 3-4 என்ற ரீதியில் புல்ஹாமிடம் தோற்றே தொடரிலிருந்து யுனைட்டெட் வெளியேறியிருந்தது.

பெனால்டியில் முதல் மூன்று உதைகளையும் இரண்டு அணிகளும் உட்செலுத்திய நிலையில், புல்ஹாமின் கோல் காப்பாளர் பேர்ண்ட் லெனோ அடுத்த இரண்டு உதைகளையும் தடுத்ததோடு, நான்காவது உதையை புல்ஹாம் கோல் கம்பத்துக்குள் உட் செலுத்திய நிலையிலேயே 4-3 என்ற ரீதியில் வென்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 04, மார்ச் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.